உ

கடவுள் துணை.

சுப்பிரமணியர்ஞானம்-உ௱.

அகத்தியமகாமுனிவருக்கு

உபதேசஞ்செய்தது.

இஃது

மயிலம்

சுப்பிரமணியசுவாமிகளால்

பார்வையிடப்பட்டு

சென்னை - இ. டா

பார்த்தசாரதிநாயுடு

அவர்களாற் றமது

ஸ்ரீபத்மநாபவிலாசஅச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது.

நெ-1. திருப்பள்ளிசந்து பெத்துநாயக்கன்பேட்டை

MADRAS.

1896.

கடவுள் துணை.

சுப்பிரமணியர் ஞானம்.

இருநூறு.

அண்டபராபரமானபரையின்பாத
  மையமெனங்களாதிவஸ்துபதமும்போற்றி
தொண்டர்கள்தன்மெஞ்ஞானபதமும்போற்றிச்
  சொல்லுகிறேன்உபதேசமிருநூறுதன்னை
மண்டலிகர்மகாயோகிமதிக்கவென்று
  மருவில்லாஞானமதைமாட்டவேயான்
கண்டவர்கள்கண்டற்கோடாவியாகக்
  கணக்காகஞானமதைகாட்டுவோமே (க)

காட்டுகிறேன்பூரணமேவெளியதாகக்
  கலங்காமல்வெளியிலுடைபதமும்போற்றி
பூட்டுகிறேன்ரவிமதியைக்காண்பதற்குப்
  புகல்பெரியநாதாக்கள்பாதம்போற்றி
நாட்டுகிறேன்மெய்ஞ்ஞானம்வெளியதாக
  நல்வினையுந்தீவினையுமீண்டும்போகப்
பூட்டுகிறேன்திரவுகோல்திறந்துதானுற்
  புத்தியுள்ளபிள்ளாய்நீபேணிக்கேளே (௨)

கேளடாஅகஸ்தியனேகிருபையாகக்
  கெடியானபராபரமேயொன்றேதெய்வம்
ஆளடாஅதுநிலையையறியவேணும்
  அண்டசராசரங்களெல்லாந்தெரியவேணும்
நாளடாபூரகத்திலேறவேணும்
  நல்வினையுந்தீவினையும்போக்கவேணும்
கேளடாகருவுகளைக்கொல்லவேணுங்
  காலனையுங்கட்டறுத்துக்கொள்ளுவாயே (௩)

கொள்ளடாவாசியொன்றேமுத்தியாகுங்
  கொடியமதொருநற்றவமுஞ்சித்தியில்லை
அள்ளடாவாசிதனையடுத்துமைந்தா
  ஆதிவஸ்தைபதுதினமும்நெஞ்சில்வைத்து

மெள்ளடாமறுபடியும்யோகம்பார்த்து
மேன்மையுள்ளஞானமதைமேவிக்கொள்ளு
வள்ளடாவல்லவனாய்க்கண்டாயானால்
வஸ்தானவஸ்துவும்வாய்க்குந்தானே (௪)

தாமடாமாசியென்றதுரியையேறி
தத்துவங்கள்தொண்ணூற்றாறுதனையறுத்து
ஓம்டாஓங்காரத்துள்ளொடுங்கி
ஓம்நமசிவாயவென்றுமனதிற்றங்கி
நாமடாசுமனுடையபட்டணமுந்தாண்டி
நாதாந்தச்சுடரிலேநாடிச்சென்று
வாமடாவாமமதைக்கண்டுபோற்றி
வாலையெனும்பராபரையைமனதிற்றங்கே (௫)

தங்கியேமனதிலேயும்நிலையாய்த்தங்கித்
தமர்திறக்கும்வாசலுடகடவுங்கண்டு
அங்கியேஆறுதலமடுத்தேயேறி
ஆதிவஸ்தையனுதினமுமுன்னுட்கொண்டு
எங்கியேயிராறுதலமுந்தாண்டி
யிடகலையும்பிங்கலையுமீடழியச்செய்து
பொங்கியேபரமானநதியுந்தாண்டிப்
பச்சைமயிலேறியுந்தான்பாடுவாயே (௬)

பாடவேகின்னரியுமாலியின்வீட்டிற்
பகல்வத்திதீவட்டிமுதற்பகலாய்த்தோணும்
ஆடவேயைந்தெழுத்துமிதிலேதோணும்
மப்புறமுஞ்சங்குதொனியறிவாய்க்கேட்கும்
நாடவேதமர்திறக்கும்வாசல்தோணும்
நந்தியுடவீற்றிருப்புநட்புந்தோணும்
வாடவேவச்சிரமணிவிளக்குந்தோணும்
வாலையுடசிலம்பொலியும்வாய்க்குந்தானே (௭)

வாய்க்குமடாமனதழுந்தகையறுக்கவேணும்
வஞ்சகமெனும்புத்தியைமாய்க்கவேணும்
ஏய்க்குமடாயேப்பாணப்பேச்சையும்மே
யீடழியக்கண்டுமுதலிறுத்தவேணும்

நாய்க்குமடாநாய்போலேதிரியவேணும்
நல்லோரைக்கண்டாக்கால்வணங்கவேணும்
பேய்க்குமடாபிரமனையேபோற்றவேணும்
பிரபலங்கள்பண்ணுமற்பிலத்துநில்லே. ௮

நில்லடாஒருமனதாய்நிலையில்நில்லு
நித்தம்நித்தம்பிராணாயம்நினைவாய்க்கூட்டு
அல்லடாகற்பமதையறிந்தேயுண்ணு
ஆறுவகையூடுருவியடுத்தேயேறும்
வல்லடாவாசியைத்தான்மேலேனுக்கு
வயிரமங்கேயிருக்கின்றவகையுங்காணும்
அல்லடாயிப்படியேஅறிந்துகொண்டு
ஆதிவஸ்தையனுதினமுமறிவாற்போற்றே. ௯

போற்றடாகற்பமுண்டாலெனைப்போலாவாய்
பூருவத்தின்ஞானமெல்லாம்பொருந்தத்தேதானும்
ஏற்றடாசிங்குவைத்தான்பிடித்துமைந்தா
யென்மக்காள்நித்தமுந்தான்பிசங்கூட்டி
வாற்றடாபதின்மூன்றுவருஷந்தானும்
மைந்தனேகற்பமதைமனதிற்கொள்ளு
சாற்றடாயரவணையுமுனக்குத்தேதானும்
சண்முகந்தானென்றுசொல்லிச்சாற்றலாமே. ௰

சாற்றலாய்வேல்முனையுமுனக்குச்சித்தி
தவப்பொருளுமுந்தனுக்குச்சன்னிற்கிட்டும்
ஏற்றலாம்நமன்கயற்றையறுத்துப்போடும்
ஈராறுதலந்தாண்டியிருக்கலாகும்
வாழ்த்தலாம்வச்சிரம்போற்றேகமாகும்
வளக்கானகருவிகளைமாளப்பண்ணும்
போற்றலாம்பூர்வகன்மவினைகள்போகும்
பொல்லாப்புவானதெல்லாம்போகுந்தானே. ௰௧

தானென்றமெய்க்குருவே அருளிச்செய்தீர்
சடாட்சரனேசண்முகனேதயவாய்நீயும்
நானின்றநற்குருவைவிட்டுச்சொல்லும்
நலமானகற்பவகைகட்டுஞ்சொல்லும்

ஊமென்றவாசியுடனொழுக்குஞ்சொல்லும்
உன்முனையைக்காணுகிறவொளியுஞ்சொல்லும்
வானென்றவானவர்க்குவழியுநாதா
வடிவேலாயிந்தவகைமாட்டுவீரே, ௰௨

மாட்டுகிறேனென்மகனேமாணுகேளு
மகத்தானகற்பமென்றமார்க்கஞ்சொல்வேன்
பூட்டுகிறேன்சிகாரமென்றநெல்லிசேரு
புதுமையுள்ளமகாரமென்றசீருஞ்சேரு
ஆட்டுகிறஆதிவல்லைதயதிலேசேரு
யடங்காதவெனதாயாள்வல்லஞ்சேரு
நாட்டுகிறநாளிங்தாளென்றதாக
நலமானதேவியைத்தாட்டுவாயே, ௰௩

நாட்டடாநாற்கோணமுன்னேயிட்டு
நலமாகவட்டமிட்டறுகோணமிட்டுப்
பூட்டடாமுக்கோணம்அதுமேலிட்டுப்
புகழானபிறைவட்டமேலேபோட்டு
மாட்டடாவெனதாயாள்முகந்தான்வைத்து
மதிக்கவேஆறெழுத்தைஅதிலேசாத்தி
வரட்டடாகற்பமதைமனதில்வைத்து
வாலைதனைப்பூசைசெய்துவணங்கிக்கொள்ளே. ௰௪

கொள்ளவேநாதாக்கள்சாபந்தீருங்
கொடியதொருவஞ்சகங்கள்குதித்தேயோடும்
அள்ளவேயாறுகலமடுத்துத்தோணும்
ஆயியுடபாதமதுஅறிவால்வாய்க்கும்
மெள்ளவேவாசியைத்தான்வாங்கிமைந்தா
மேன்மைபெறவேணுமென்றுமனதிற்றங்கில்
வள்ளவேவஞ்சகத்தைக்கட்டறுத்து
மகத்தானகற்பமதைவணங்கிக்கொள்ளே. ௰௫

கொள்ளவேமுபமூலங்கொண்டேயானுங்
குமாரனென்றவெந்தனுக்குப்பேருமாச்சு
அள்ளவேஆயிரத்தெட்டிதழுங்கண்டேன்
அறுகற்பமகாரமுந்தான்மடக்கிக்கொண்டே
வள்ளலேவயிரத்திருவிளக்கைக்கண்டேன்
வாலையுடசிலம்பொலியுமதிக்கப்பெற்றேன்
நள்ளவேநாதாந்தச்சுடரிற்சொக்கி
நாலைந்துவாசலையுமடைத்திட்டேனே. ௰௬

அடைத்திடவே[illegible]பொறியுங்கெட்டேனியானும்
  ஐயையா[illegible]டைத்துப்போச்சு
[illegible]டைத்திடவே[illegible]நலக்கப்போச்சு
  பாயானைய[illegible]டையந்துசென்றேன்
படைத்திடவே[illegible]றச்சொக்கிக்கொண்டேன்
  வயிரமங்கை[illegible]வகையுங்கண்டேன்
முடைத்திடவே[illegible]கொண்டதாலே
  முருகனை[illegible]க்குப்பெருமாச்சே. ௰௭

போராகியூராகிப்பெ[illegible]னான்
  பேசாதவ[illegible]பருங்கொண்டேன்
ஆறுகியரூபவு[illegible]லேன்
  அழியாதவ[illegible]அருளும்பெற்றேன்
நேராகிநிர்மல[illegible]மாகி
  நீங்காதபொ[illegible]த்தேநின்றேன்
பாராகிப்பரு[illegible]ர்ந்தேபாலும்
  பச்சைமால்பருகனென்றுபகர்ந்திட்டாரோ, ௰௮

பகர்ந்திட்டார்பராபரமானசோதி
  பதிவானமெய்ஞ்ஞானம்பகர்ந்தேசெய்தார்
அகர்ந்திட்டார்மும்மூலம்உபதேசித்தார்
  ஆறுவகையுருவி அரியச்சொன்னார்
இகர்ந்திட்டாரீராறுதனமுஞ்சொன்னார்
  இரவிமதிசோலையிலே இருக்கச்சொன்னார்
தகர்ந்திட்டவிந்துவையுங்கட்டச்சொன்னார்
  சண்முகநாதனென்றுசொல்லிசாற்றினாரே ௰௯

சாற்றினார்மும்மூலத்ததுவுஞ்சொன்னார்
  சராசரங்களுள்ளமெல்லாஞ்சார்ந்தேநின்றேன்
எற்றினோனதுபிராணனைக்குமைந்தா
  எல்லையில்லாப்பேரொளியை அறியச்சொன்னார்
வாழ்த்தினார்வஸ்தேதாடவந்தாய்நிற்க
  வாசியென்றவடிவேலைவருந்தியீந்தார்
ஆற்றினைரூபமனதிலேபா
  அடங்கியே அனுதினமும்வாழ்த்திட்டேனே. ௨௰

வாழ்த்திட்டேன்புருவமையமத்திற்சொன்னேன்
  வாசியென்றவடிவேலைவாங்கிக்கொண்டேன்

ஈழ்ந்திட்டேனிருவிழியை அடக்கிச்சென்றேன்
இயலானசுந்தியிலேவிரங்கிவாழ்ந்தேன்
சார்ந்திட்டேன்சங்கரற்குபதேசஞ்சொன்னேன்
தாயானவஸ்துவையுந்தாங்கியுண்டேன்
ஆழ்ந்திட்டேன்ஆதிவஸ்துவைக்கண்டுகொண்டேன்
அதினாலேஆறுமுகனென்றுபேரோ. ௨௧

பெற்றபேர்ஒருவராற்சொல்லப்போமோ
பேதையென்றுமனதிலேவைக்கப்போமோ
அற்றபோழிகுழியில்விக்கப்போமோ
அருயிரும்வேறென்றுநினைக்கப்போமோ
சித்திபெறதீவினைகள்செய்யப்போமோ
தெருவீதியெங்குந்தான்திரியப்போமோ
அற்றபோதருளுபதன்னைப்போற்றி
அழகானசுடரிலேசொக்கியேறே. ௨௨

ஏறடாபதின்மூன்றுவருடமைந்தா
யென்மகனேமும்மூலமெண்ணிக்கொண்டு
காரடாகருவிகளைகொன்றுநானுங்
கருஞ்சாரைரெண்டுமுதற்களற்றிநீயுஞ்
சேரடாசிங்கென்றமௌனமூட்டித்
திரிபுரையையனுதினமும்நெஞ்சில்வைத்து
நேரடாசித்தமுந்தான்பீசங்கூட்டி
நேர்மையுடன்பரகெதியில்நீஞ்சுவாயே. ௨௩

நீஞ்சலாய்நியிஷத்திற்பெற்றுநீயும்
நிலையானபொருள்தன்னைநினைத்துக்கொண்டு
பாஞ்சுபார்வாசியென்றபதியிலேறிப்
பராபரத்தைபனுதினமுநெஞ்சில்வைத்து
ஆஞ்சபாரைந்தெழுத்தைநெஞ்சில்வைத்து
அனுதினமுமும்மூலமறிவாய்க்கொண்டு
வாஞ்சுபார்வாசியைத்தான்நாட்டஞ்செய்து
வளக்கானபெண்ணாசைமனத்திற்றள்ளே. ௨௪

தள்ளடாபடுகுழியில்விழுகாதப்பா
தாயானசிற்பரையைமறவாதேயப்பா
அல்லடாபதின்மூன்றுவருடமட்டும்
அழகானபோகமுந்தான்அறிவாற்றன்று

மெள்ளடாகடுகொடுநல்லெண்ணெயுந்தான்
மேவியேதள்ளடாவிரைந்துசொன்னேன்
நள்ளடாபதின்மூன்றுதாண்டிச்சென்றால்
நலமானவிந்துமுதற்கட்டும்பாரே (௨௫)

பாரொன்றுபராபரனைப்பகர்ந்துசொன்னீர்
பதிவானமும்மூலம்போக்கைச்சொன்னீர்
ஆமென்றதத்துவத்தையடக்கச்சொன்னீர்
ஆயிழையாள்போகமதைமறக்கச்சொன்னீர்
நாடுமென்றவர்சியுடநாட்டஞ்சொன்னீர்
நாதாந்தப்பேரொளியின்நட்புஞ்சொன்னீர்
காரென்றயோகத்தைக்கலந்துசொல்லுங்
கருவானமந்திரத்தைக்காட்டுவீரே (௨௬)

காட்டுகிறேனறிவுள்ளபிள்ளாய்க்கேளு
கருவாகப்பதின்மூன்றுசென்றபின்பு
ஆட்டுகிற அம்மென்றுமௌனமூட்டி
ஆதிவஸ்தையனுதினமுமறிவாய்க்கொண்டு
நாட்டுகிறேன்பதினெட்டுமோசமைந்தா
நலமாகவோரிடத்தில்நாடிநின்று
கூட்டுகிறகுருபதத்திற்கூக்கலிட்டு
கூசாமல்மௌனத்தைக்கொள்ளுவாயே [௨௭]

கொள்ளவேபாசிபயராகுமாகுங்
குறுவைநெல்பச்சரிசிதானுமாகும்
மெள்ளவே ஆவின்பால்தன்னிற்பொங்கி
மெய்ஞ்ஞானம்மேவனுமென்றுவிரும்பிநீயுந்
தள்ளாமேநித்தமொருநேரங்கொள்ளு
தப்பாமற்பசிநாளும்தளர்ந்துபோகும்
விள்ளவேயோகமதைவிரும்பிப்பாரு
மெய்ஞ்ஞானியென்றுவெளியேறலாமே (௨௮)

ஏறலாமாயிரத்தெட்டிதழும்கோணும்
யென்மகனே அமுதகமுந்தான்குமுளிபாயும்
பாரெலாம்விந்துவதுகட்டிப்போகும்
அசையாதமணிபூரகமடங்கிநிற்கும்

பாரெலாம்பருமணியாய்வனுத்துபோகும்
பச்சைமயிலுந்தனுக்குபகர்ந்துயீவார்
நேரலாம்பரகெதியுமுனக்குக்கிட்டும்
நித்தியமுமமுந்தந்தானுண்ணலாமே (௨௯)

உண்ணலாமதைவிட்டாற்கற்பமில்லை
ஒருமணியாய்த்திரட்டிவைக்குமுறுதியாகத்
திண்ணலாமதுவல்லோகற்பங்கற்பந்
தீவினைகள்தானகற்றுந்திடமாய்ச்சொன்னேன்
நண்ணலாம்ஊசிநடுவீதிதோறும்
நாலைந்துவாயலையுமடைத்துக்கொள்ளும்
கண்ணலாங்கழிவியுஞ்சொருகிப்போகும்
காரணசற்குருவென்றுகருதுவாரே (௩௰)

கருதவேயென்குருவேதடமுஞ்சொன்னீர்
காரியமாய்வாசியைத்தான் அடக்கச்சொன்னீர்
அருதவேயாறுதலந்தெரியச்சொன்னீர்
அப்பாலும்போகமதையடக்கச்சொன்னீர்
பொருதவேயெப்படிதான்வாசிதன்னைப்
போதரவாய்க்காணுகிறபுகலுஞ்சொல்லுங்
கருதவேமும்மூலம்பிரித்துச்சொல்லுங்
கருவூரிற்காங்கயனேகருவாய்த்தானே (௩௧)

கருவாகச்சொல்லுகிறேன்மாணுகேளு
கருவானகுண்டலியைமேலேனோக்கி
உருவாகமேனோக்கிப்பார்க்கும்போது
உத்தமனேபிடரிவழியுயர்ந்துவோடும்
மருவாகநித்தமுந்தான்பீசங்கூட்டு
அப்பனேவருடம்பதின் பதின்மூன்றுமட்டும்
குருவாகநீயறிந்துகூர்மைபாரு
குருவறியவாசியுந்தான்குதியாதென்றே (௩௨)

குறியாதுகுறுகாதுஉடல்தானப்பா
கூர்மையதுநீளாதுகுறையாதப்பா
அழியாதுஉடல்தானுமுப்பாதப்பா
அருபசுடர்தன்னிமேலஅறிவாய்க்கூட்டும்

பதியாதுபதியிரவிமேலேநோக்கும்
    பலபலவிதங்களெல்லாம்பாழாய்ப்போகும்
நதியாதுநதிச்சாரைகட்டிப்போகும்
    நமனுடையநிலையெல்லாம்நாசமாமே. (௧௩)

நாசமறப்பண்ணுமடாமும்மூலங்கொண்டால்
    நல்வினையுந்தீவினையுமிரண்டும்போகும
பாசமறப்பண்ணுமடாவஸ்தையுண்டாற்
    பலபலபுத்தியெல்லாம்பாழாய்போகும்
வாசமறபண்ணுமடாவாசிநாட்டம்
    வழக்கானசுழிமுனையும்வாரிக்கொள்ளுந்
தூசமறத்துரியமுந்தான்தூர்ந்துபோகுந்
    துவாதசாந்தத்திலேறித்தொழுதுநில்லே (௧௪)

நில்லடாவாக்குமனமொன்றாய்நில்லு
    நிட்சயத்தைப்பற்றியினிநினைவாய்நில்லு
அல்லடாஆறுதலங்கடந்தீரானால்
    ஆயிரத்தெட்டுமாத்தழகுமுண்டு
வல்லடாவாசியைத்தான்மேலேநோக்கு
    மைந்தனேகீழ்நோக்கமாட்டாதப்பா
அல்லாடாயிதையறிந்துசெய்தீரானால்
    ஆத்மாவும்நீயாச்சுவையயாபாரே (௧௫)

யாரப்பாமும்மூலம்பகரக்கேளு
    பாலான அன்னமுந்தான்பொசித்திரையா
ஆரப்பாமூன்றுபங்குகழிந்துபோச்சு
    ஆத்மாவும்உன்னைவிட்டுஅகன்றுபோவார்
நேரப்பாமூன்றையுந்தான்கொண்டயானால்
    நிட்சயமாய்மும்மூலம்நிலையிதாகுந்
காரப்பாஆத்மாவுங்கழன்றிபோகார்க்
    கன்னையும்ஒருநிலையில்கட்டலாமே (௧௬)

கட்டலாங்கபடற்றசித்தனவாய்
    கைலாயமேதகமடாகருணையாகும்
வெட்டலாங்காலனையுமிட்டிமைந்தா
    வேல்முனையிலேறிவிளையாடலாம்நீ

தட்டலாந்தமர்திறக்கும்வாசல்தோணுந்
　　தாயானசிற்பரையுந்தனதேயாவாள்
முட்டலாஞ்சூரசங்காரஞ்செய்து
　　முடிக்கலாங்கருவிகளைமுடிக்கலாமே (௧௭)

முடிக்கலர்முச்சுடரின்தைலத்தாலே
　　முதலானமனக்குளிகைமுறையாய்மைந்தா
தட்டலாம்நாதாந்தநந்திதன்னிலேறி
　　தனதானஉறன்முறையைசண்ணிப்போடு
கட்டலாங்காமத்தைகருவாய்மைந்தா
　　காரணமாரும்மூலங்கருணையாலே
நட்டலாம்நாதமணிஒன்றதாக
　　நலமாகவஸ்துவுடனாட்டந்தானே (௧௮)

நாட்டமுடன்கும்பகபூரகமுமையா
　　நடுவானரேசகமுமூன்றுமொன்றாய்
வாட்டமுடனென்றாகக்கயிறாய்வாங்கி
　　வரிசையுடன்மேனோக்கிவலுவாயுண்ணு
தாட்டமுடன்சதகோடிரவியுந்தோணுந்
　　தமர்திறக்கும்வாசலங்கேதயவாய்த்தோணும்
பூட்டமுடன்பூரகத்திலேறினக்கால்
　　புத்திரனேபொல்லாப்புபோகுந்தானே (௧௯)

போகுமடாபொல்லாப்புசிவசெந்து
　　புத்திரனேமற்றதெல்லாம்நாமேயாகும்
ஆகுமடாஅறுமுகனைக்கண்டோர்க்கெல்லாம்
　　ஆறுவரையூடுருவிஅறிவிற்சேர்க்கும்
நாகுமடாநாதமணிதானேகட்டும்
　　நல்வினையுந்தீவினையுமாண்டுபோகும்
பாகுமடாபராபரமுமுனக்குச்சித்தி
　　பதிவாகப்பறியேரிநடத்தலாமே (௨௰)

நடத்துவாயேரகமுந்தான்தாண்டித்தானல்
　　நலமானகும்பத்தில்நாடிச்செல்லு
அடத்துவாயோங்காரத்துள்ளொடுங்கி
　　ஆதிவஸ்துவுண்டென்றும்அறிவிற்றங்கி

மூடத்துவாய்முன்னணியாய்ப்பூசைசெய்து
முதண்டபிரமனையுமோதித்தாக்கிக்
கூடந்துவாய்கரிமாலைகருவாய்க்கொண்டு
கருவிகளைச்சீரழிந்துகடந்தேறுவாயே (௪௧)

ஏதுவாயிப்படியேஆனபின்பு
யென்மகனேஅங்கிஷ்டமாகிப்போவாய்
தேருவாய்கற்பூரச்சுடர்போல்நிற்பாய்
தேவியுந்தானனுதினமுந்தொண்டுசெய்வாள்
நேருவாய்பரகெதியுமுனக்குக்கிட்டும்
நேரானரவிமதியுமாண்டுபோகும்
பாருபார்பராபரனுநீயுமாவாய்
பழுதில்லாச்சித்தனென்றுபகரலாமே (௪௨)

பகரலாமென்றுநீசொன்னீரையா
பதிவானயோகமென்றபதுமைசொல்லும்
அகரலாமரிபீடம் அறியச்சொல்லும்
ஐந்தெழுத்தானதையுமறிவாய்க்காட்டும்
இகரலாம்பிராணயமறியச்சொல்லும்
இந்திரகிரிமலையிலேயிருக்கச்சொல்லுந்
தகரலாம்நந்தியுடதனுவுஞ்சொல்லுஞ்
சண்முகனேசடாட்சரனேசாற்றுவீரே (௪௩)

சாற்றுகிறேனென்மகனேமாணுகேளு
சந்தியமாயோகமென்றதனுவைச்சொல்வேன்
ஏற்றுகிறேன்முன்சொன்னமௌனம்பூட்டி
யின்பமுடன்பேரொளியுமெண்ணிக்காணும்
வாற்றடாநித்தமுந்தான்ஒண்ணரைபீஜம்
வளமாகபிராணயம்வசமாய்க்கூட்டு
போற்றடாபதினெட்டுமாதமட்டும்
புத்திரனேபிராணயம்பொருந்திக்கூட்டே (௪௪)

கூட்டியேயோகமுந்தான்பார்த்தீரானால்
குறையாதபேரொளியைக்குணமாய்க்காண்பாய்
ஆட்டியேஅரூபவெளிநீயுமாவாய்
ஆயிரத்தெட்டிதழ்மலரும்அறிவாய்க்காணும்

நாட்டியே அமுதமுந்தான்வடியுமைந்தா
நரகமென்றதேபதெல்லாம்நாசமாகும்
பூட்டியேபூரணம்போலிலங்குந்தேகம்
புதுமைசராசரங்களெவ்வாம்போக்கவாமே. (௬௫)

போக்கலாமைந்தெழுத்தின் வகையைக்கேட்டாய்
புத்திரனேயைந்தெழுத்தைப்பிரித்துச்சொல்வேன்
ஆக்கலாஞ்சிகாரமென்றநெல்லியொன்று
அப்பனேமகாரமென்றதீருமொன்று
வாக்கலாமுகாரமென்றநாதமொன்று
மைந்தனேஅகாரமென்றவஸ்துவொன்று
நாக்கலாம்நாதமணிசிவந்தானென்று
நலமாகப்பஞ்சகருவிதுதானச்சே (௬௬)

ஆச்சப்பாயிதுவல்லோகற்பங்கற்பம்
அடங்காதமும்மூலம்அருமையாச்சு
வச்சப்பாசொல்லக்கேள்வேதிருக்குமென்று
வென்மகனேயென்னசொல்வேனிந்தமார்க்கம்
வாச்சப்பாயிதையுண்டால்வழுத்துப்போச்சு
வாசியென்றசவ்வாரிவருதும்போது
மூச்சப்பாமூச்சற்றயிடமுந்தானும்
முனையானசுடர்தனிலேமுழங்கலாமே (௬௭)

முழங்கவேகருவிகளுங்குதித்தேயோடும்
முச்சுடருமொன்றாகி முழங்கிநிற்கும்
தழங்கவேதகமுந்தான்வழுத்துப்போகும்
தாயானசிற்பரையுந்தனதேபாவாள்
கழங்கமில்லாசுழிமுனையில்நாட்டம்வேணும்
கண்டறிந்தோன்சித்தனவனகைவேணும்
இணங்கலாமிம்மூலங்கொண்டோனால்
யீசனுக்குமேலாகவிருக்கலாமே (௬௮)

இருக்கவடாசொல்லுகிறேனின்னங்கேளு
யிதமானபூசையுந்தான்செய்யும்போது
அருக்கவடாஓம்நமசிவாயமென்று
ஆறுதல்வீட்டினையுமடக்கஞ்செய்து

பெருக்கவடாபிராணாயங்கூட்டவேணும்
    பிசகாமல்சிங்குவையும்பூட்டவேணும்
நெருக்கவடாநிர்ணயமாய்நின்றீரானால்
    நிசமானபாகதிக்குநீஞ்சலாமே (௪௯)

நீஞ்சலாமிதைவிட்டால்கற்பமில்லை
    நித்தமுந்தானிம்மூலங்கொள்ளவேணும்
பாஞ்ஞாலஞ்சிகாரமுடன்மகாரம்ரெண்டும்
    பத்தியுடன் அணுவளவுவிட்டிடாதே
வாஞ்சையாம்பதின்மூன்றுவருடங்கொள்ளு
    வாசியென்றமயில்மீதிலணைந்துநில்லு
ஆஞ்சலானைவருந்தான்பட்டுப்போவார்
    ஆன்மாவைக்காணலாமறிந்துபாரே. (௫௰)

பாரப்பா அப்படியேஉண்டேன்யானும்
    பலவிதயோசனைகளெல்லாம்பாழாய்ப்போச்சு
ஆரப்பாமும்மூலமடுத்துக்கொண்டேன்
    ஆதிவஸ்தையனுதினமும்பணிந்துகொண்டேன்
நேரப்பாயோகத்தினிலையைக்கண்டேன்
    நிட்சயத்தைப்பத்தியுடனிலைத்துக்கொண்டேன்
காரப்பாகருவிகளும்பட்டுப்போச்சு
    கந்தனென்றுமெந்தனுக்குப்பேருமாச்சே (௫௧)

பேராகிஊராகிப்பெரிதுமானேன்
    பின்னுமுன்னுமோடுகிறகலையுமானேன்
நேராகிநிலையாகிநின்றுகொண்டேன்
    நிட்சயத்தைப்பத்திசெய்துநிலைத்துக்கொண்டேன்
பாராகிப்பருவதமாய்பலவிதமுமானேன்
    பச்சைமயிலேறியுநான்பரிந்துசென்றேன்
நாராகிநாதமுந்தானுண்டுகொண்டேன்
    நாதனென்றுமெந்தனுக்குப்பேருமாச்சே (௫௨)

நாதனென்றுபேரெடுக்கவருமோசும்மா
    நாடியேமும்மூலங்கொள்ளாதார்க்கு
காதமல்லத்தூரமல்லச்சொன்னேன்பாரு
    கணமூக்குமத்தியிலேகருதிப்பாரு

பாதமல்லோபரகெதியுங்கிடைக்குமைந்தர்
பருமணியாய்த்தேகமுந்தான்திரண்டுபோகும்
ஆகமல்லோஆறுதலமுறுவியேறும்
அதினாலேஆறுமுகமென்றுபேரே (௫௩)

பேச்சிட்டுவாய்நாலேபேசினாலும்
பிழைவருமேமூம்மூலம்பிரித்துச்சொன்னால்
ஆச்சிட்டுஆதிவஸ்தையறிபாவிட்டால்
அனலாகக்கொதித்திடுமேதேகமப்பா
வாச்சிட்டுவாசியிலேயேறுவிட்டால்
வாரிவிடுமுன்னையுந்தான்மைந்தர்சொன்னேன்
மூச்சிட்டுமுனையில்நின்றுமுழுங்கிநீயும்
மூச்சடாரயென்றைக்குமுழுங்கிநில்லே (௫௪)

நில்லடாமும்மூலங்கொண்டுகாணும்
நிலையானவாசியைத்தனினைத்துபோற்று
அல்லடாகற்பமும்தான்கொள்ளாமற்றான்
அறிவானவாசியைத்தான்பெற்றிருக்கால்
மெல்லடாதேகமுந்தான்பொத்துப்போகும்
பேன்மையுள்ளவாசியுந்தான்குதித்துவோடும்
வல்லடாவல்லவனுப்க்கற்பங்கொண்டு
வாய்வானவாசியைத்தான்வாங்குவாயே (௫௫)

வாங்கியிடாவிகுளிகைமதியில்கட்டும்
வாரிவிடும்பிரமத்தில்வளர்ந்தேநிற்கும்
ஏங்கியிடமனக்கண்ணுந்தீர்ந்துபோகும்
எல்லையில்லாப்பேரொளியுமொன்றும்வாய்க்குந்
தாங்கியிடத்தமர்ந்திரங்கும்அமுதம்பாயுஞ்
சண்டனென்றகூரணையுஞ்சண்ணிக்கொல்லும்
மூங்கியிடமும்மூலமற்றும்போகும்
முக்கியமாய்ச்சிவயோகம்வாய்க்குந்தானே (௫௬)

வாய்க்குமோவாராதோவென்றுநீயும்
மனதிலேதயங்கியினிஅலாவேண்டாம்
ஏய்க்குமேஞானமெல்லாமுன்னைக்கூட
யேகாந்தப்பிரமைவந்துயிழுத்துக்கொள்ளுந்

தாய்க்குமேதாய்பதத்தைபூசைசெய்து
தானவனாய்த்தானாகநிலைத்துவாழ்ந்து
காக்குமேகருவிகளைக்கழற்றிப்போட்டு
காரணசற்குருவையுநீகண்டுகொள்ளே ௫௭
கொள்ளவேகருவிகளைக்கொன்றுபோட்டேன்
கோளறவாசியைத்தான்கூர்ந்துபார்த்தேன்
அல்லவேயருமுனையையறிந்துகொண்டேன்
அப்புறம்பனிரெண்டுதலமுங்கண்டேன்
வல்லவேபனிரெண்டையடக்கிச்சென்றேன்
வாய்வானசுழல்காற்றில்மருவிச்சென்றேன்
மெல்லவேபூமலர்கள்வாசங்கண்டேன்
மேநினியைத்தான்படைத்தேன்விரித்துக்கொள்ளே ௫௮
கேளடாமேகநிறம்பூண்டுகொண்டேன்
கேணியெனும்முக்குழியைத்தள்ளிப்போட்டேன்
ஆளடாஅவ்வூரிலிருந்துவாழ்ந்தேன்
அதிசயங்களுள்ளதெல்லாமறிந்துகொண்டேன்
நாளடாநாள்வளப்பஞ்செய்யமற்றான்
நந்திதனிமேலறியுந்தானடனஞ்செய்தேன்
பாளடாபஞ்சபூதநிலையுங்கண்டேன்
பாய்ந்துமயில்மீதேறிப்பரிந்திட்டேனே ௫௯
பரிந்திட்டேனவ்வூரில்குடிபுகுந்தேன்
பஞ்சவர்ணப்பாலாடைபரிந்துகண்டேன்
அரிந்திட்டேனூரிலடங்கினின்றேன்
ஆதிவஸ்துவானதையுமறிவாற்கண்டேன்
தெரிந்திட்டஞானநிலைதன்னைக்கொண்டேன்
நிட்சயமாய்த்தத்துவத்தினுறுதிக்கண்டேன்
அறிந்திட்டேன்வாசிவடிவேலைவாங்கி
வல்லவனுக்குபேதசமாட்டினேனே ௬௰
மாட்டினேன்பூருவத்திலசித்தினாலும்
மதலையாயனுதினமுமதிக்கப்பெற்றேன்
நாட்டினேன்சிங்குவைத்தான்பிடித்தலாலே
நமனெழுந்தும்நாடிடவேநாசமாச்சு
வாட்டினேன்வாசியிலேவளர்ந்ததாலே
வாலைக்குப்பிள்ளையென்றுமதிக்கப்பெற்றேன்
காட்டினேன்கருநெல்லியுண்டதாலே
காரணசற்குருவென்றுகருதலாச்சே ௬௧
கருதவேபுலியூரிற்புகுந்துவாழ்ந்தேன்
கபாடற்றசித்தனென்றுகருதலானேன்
அருகவேஆறதிலடுத்துக்கண்டேன்
அதினாலேஆறுக்குஆசானானேன்

பொருகவேபுலியூர்க்குமேற்கேசென்றேன்
    பொல்லாப்புக்கழுகுமலைதப்போக்கிவிட்டேன்
கருதவேவடகாரியென்றநீரையுண்டேன்
    அதனருகிலேகர்ங்கணையுங்காணலாச்சே ௬௨

காணுதகாட்சிபலவாங்கண்டுகொண்டேன்
    கருதவேவெட்டமுங்கான்கருதிக்கொண்டேன்
பூணுதஆபரணம்பூண்டுகொண்டேன்
    புகழானவேட்டமுந்தான்தரித்துக்கொண்டேன்
நாணுதகாலமெல்லாம்நாசமற்றேன்
    நல்வினையுந்தீவினையுமிரண்டுமற்றேன்
தாணுமயில்மீதிலேறிக்கொண்டேன்
    தந்திமுகன்றனக்கினியசாமிநானே ௬௩

நாணுநானவனுமாநானுமானேன்
    நல்லசிவகாமிக்குத்தனையனானேன்
ஊனுஉற்பனமாயுலகமானேன்
    உள்வீட்டுக்குள்ளிருக்குமொளியுமானேன்
மாணுமாயுபனுமாரானுமானேன்
    மரகதப்பச்சையம்பாள்மதிக்கப்பெற்றேன்
ஆனுனஅருட்வெளிஒளியுமானேன்
    ஆதிவஸ்துவானதும்நன்றாய்ப்பாரே ௬௪

பாரப்பாஉலகமெல்லாம்படர்ந்துநின்றேன்
    பத்தருடைபைங்கிலியும்பதிவாய்வாழ்ந்தேன்
ஆரப்பாஅஷ்டாங்கநிலையைப்பெற்றேன்
    அரிதானமயக்கமதையருளாய்நின்றேன்
நேரப்பாநிறைமதியாம்ஆத்தாள்வீட்டில்
    நிருத்தினின்விருக்கையிலேவிதானங்கண்டேன்
காரப்பாகருக்கிடையுங்குருகிடையுங்கண்டேன்
    கபாலமங்கேதுரத்திலங்கண்டுகொள்ளே ௬௫

கொள்ளடாநான்சொன்னமூலம்போலே
    குருவறியச்சொல்லார்கள்கூர்ந்துகேளு
அல்லடாயென்னைப்போலசொல்வாருண்டோ
    அடங்காதமௌனசித்தமூலந்தன்னை
வல்லடாவல்லவர்க்குச்சொல்லிவிட்டேன்
    வழியாதையானதொருவகைகளெல்லாம்
மெல்லடாயிதையறிந்துமெய்ஞ்ஞானங்கொண்டால்
    மேதினியிற்சிந்துவிளையாடலாமே ௬௬

ஆடலாமம்பரத்திலெத்தாயேறி
    ஆயிரமுழக்கம்பத்தூணில்நின்று
பாடலாம்பதினெட்டுஇராகபாஷை
    பருமணியிற்செஞ்சுடரையேறிக்கொள்ளும்

நாடெலாம்மானையுந்தானுமைந்தப்போடும்
    நாகமென்றபேச்சையெல்லாம்நாசமாக்கும்
காடெல்லாம்வெட்டிக்கருவழித்துப்போடே
    கருச்சாரைவெண்சாரைகழன்றுபோமே ௬௭

கழறுகின்றநாமெல்லாமிருகிப்போகுங்
    கனமானமும்மூலக்கனலினாலே
அழறுகின்றபாசமெல்லாமற்றுப்போகும்
    அருபவெளிதன்னிலேயடங்கிநிற்கும்
தளருகின்றதாய்பதத்திற்றுணைசேர்க்குந்
    தத்துவாத்தொண்ணூற்றாறுந்தகர்த்துப்போடும்
வளருகின்றவாய்மானயோகத்தாலே
    வச்சிரமிட்டதேகமாய்வளருந்தானே ௬௮

வளருமடாயிக்கமுறைமையறியவேணும்
    மரகதப்பச்சையிலேவளரவேணும்
அளருமடா அழிகுழியைத்தள்ளவேணும்
    ஆயிபுட அச்சரத்தைத்தெரியவேணும்
தளருமடாதாய்பதத்தைப்போற்றவேணும்
    தத்தையெனும்வெளிதாண்டியிருக்கவேணும்
கழறுமடாகாமத்தைக்கட்டவேணும்
    கருவிகளைக்கொன்றுகடந்தேறுவாயே ௬௯

தேருவதுலெகுவல்லவாய்ப்பேச்சில்லை
    தெளிந்துசிவயோகியென்றுற்றறுவான்காண்
மேருவதுமோனந்தல்போல்மருவலாவான்
    மேலானபதவியிலேமிளிர்க்கொள்வான்
ஆருவதுஆசையென்றகலக்கம்போகும்
    அகஸ்த்தியனேஉத்தனுக்குஅறியச்சொன்னேன்
நேருவதுநிட்சயமும்நிதானங்காட்டும்
    நிலவரையிற்றீபம்போல்நிற்கலாமே ௭௰

நிற்களமென்றுமேசொன்னீரையா
    நிமலனுக்குஉபதேசம்நீருஞ்சொன்னீர்
எக்கலாமீறாறுதலமுஞ்சொன்னீர்
    மந்திரகிரிபர்வதத்திலேறச்சொன்னீர்
மிக்கலாம்ஆத்துமாவையென்றேயன்றி
    மேதினியில்தெய்வங்களுண்டோசொல்வீர்
பக்குவமாம்ஞானபதிபதியைச்சொன்னீர்
    பாவெளியிலுண்மைதனைப்பகருவீரே ௭௧

சொல்லுகிறேனென்மகனேமாறேகேளு
சூட்சமெல்லாமவனுடையசூட்சமல்லால்
வெல்லுதற்குவேறுமொருவிதமுங்காணோம்
வெட்டவெளியொன்றுசிதம்வெளியேமைந்தா
அல்லுகின்றஆன்மாவேயென்றேதெய்வம்
அவனியிலேதெய்வமுந்தானேயாயிலேத்
தன்னைநிறைகருவிகளைத்தள்ளிருக்காற்
றனவினைதனக்குள்ளறியலாமே எஉ

அறியலாம்பூரணமேயென்றேதெய்வம்
அபுரூபமானதுவும்மதுதானப்பா
தெரியலாமும்மூலங்கொண்டால்மைந்தா
தீவினைகள்தாநீங்கித்தெளிந்துபோவாய்
அறியலாம்வழிபாதையிதுதானப்பா
வஸ்துவையுங்காணுதற்குவகையிதாகும்
பரியெல்லாம்பரிபோகும்பாவம்போகும்
பரகெதிக்குப்பாய்ந்துயினிபேறலாமே எ௩

ஏறலாமென்றுசொல்லிச்சொன்னீரையா
யிவ்வுலகில்தெய்வருலமென்றுசொல்லி
பேரொலாங்கூடிஆலயந்தாங்கட்டிப்
பேசாதகல்லுகளைப்பிடித்துவைத்து
பாரொலாம்பூசைசெய்வேத்தியஞ்செய்து
பலருமேகூடியதைப்பணியலாமோ
வேறலால்அவரொருவரென்றுசொன்னீர்
வேல்முருகாயிதவகைவிளம்புவீரே எ௪

விளம்புகிறேனறிவுள்ளமைந்தாகேளு
விதமாகஅப்படியுமில்லாவிட்டால்
நலம்பெறவேஞானமதைப்பார்த்துத்தானும்
நாட்டிலுள்ளஜெனங்களெல்லாம்போகியாவார்
தலம்பெறவேஅதையறிந்துசிவனையா
தான்படைத்தவுலகத்தைமயக்கிப்போட்டார்
வளம்பெறவேஞானமெல்லாமுன்னால்விட்டால்
வஸ்துவானபொருளறியானரிதுகாணே. எ௫

காணப்பாகோவிலென்றுந்தீர்த்தமென்று ௫
காசினியிற்செம்பாலேவிக்ரகர்தானென்றும்
பேணப்பாஉலகத்தோர்தங்களைத்தான்
பேய்போலேதிரிந்தலையப்படைத்தாரீசன்
நாணப்பாதேவதையைப்பணிந்திட்டாலும்

நதிகளெல்லாந்தேடிப்போய்முழுகினாலும்
ஊணப்பாஉள்விட்டுகருள்ளிருக்கும
மௌனிவுள்ளவஸ்துவைக்காண்பதரிதுகாணே ௭௬

காணடாயெழுத்துத்தானென்றுசொல்லே
காசினியோர்செய்கின்றகதையைக்கேளு
ஆணடா அஷ்டாணநியமஞ்செய்து
அனேகநதிதெய்வஸ்தலந்தொழுதிட்டாலும்
தாணடாதவமுமல்லமுத்தியல்ல
தானிருந்துவாழ்வோமென்றுஸ்நானஞ்செய்து
ஊணடாஉருவண்டவர்கள்கோடாகோடி
உத்தமனேஞானநிலைஉறுதிக்காணே ௭௭

உறுதியாய்ஞானமனதப்பாராமற்று
ஞருண்டவர்கள்கோடானகோடியையாதச
அறுதியாய்ஞானமதைப்பார்க்கவேணு
மான்மாவையனுதினமுஞ்சோற்றுவேணும்
நிறுதியாய்நிட்சயத்தைபழியவேணும்
நீடுழிகாலமுந்தான்வாழவேணும்
வறுதியாய்வானகயிலைநோக்கி
வகையானமும்மூலம்வருந்திக்காணே, ௭௮

காணப்பாமனதடங்கிஅறிவில்நில்லு
காரணமாய்ச்சற்குருவைக்கண்டுபோற்று
பூணப்பாமுன்சொன்னமூலமன்று
புவனசராசரங்களெல்லாமறிந்துப்பாரு
நாணப்பாஅப்படியேயிருந்துவாழ்ந்தேன்
நந்திதரிசனங்கண்டுநடுவாய்நின்றேன்
ஊணப்பாஉலகிலாபத்திரியமற்றேன்
ஒடுங்கானகம்மத்திலொடுங்கினேனே ௭௯

ஒடுங்கினேன்ஒங்காரநிலையிற்குள்ளே
யுற்பனமாய்ச்சிவலிங்கமுள்ளேகண்டேன்
நடுங்கினேன்மும்மூலங்கொள்ளும்போது
நாற்பத்துமுக்கோணம்நடுவாய்ச்சென்றேன்
அடங்கினேன்மாவுக்குள்ளேமைந்தா
அடங்காதசித்தனென்றுஅறிவிற்சேர்ந்தேன்
தடங்கினேன்நந்திதனிலேறிக்கொண்டேன்
தாய்பதத்தையென்றும்போற்றினேனே ௮௰

போற்றினேனெவ்வுயிரும்நான்தானென்று
புத்திரனேபூர்வகன்மவினைகள்போக
ஏற்றினேன்முககோணாவிகருள்ளாக
விபல்பானமுப்மூலமேற்றிக்கொண்டேன்
வாழ்த்தினேன்பாஷாணமூன்றுங்கொண்டேன்
வஸ்தானவஸ்தோடேவணங்கிச்சென்றேன்
காத்துநான்கருவிகளைக்கொண்டதாலே
கார்த்திகையீஸ்பரனென்றுமெனக்குப்பேரே ௮௧

ஈசனெயெங்குமாய்ப்பார்த்தேநின்றேன்
இமையோர்க்குத்தெய்வமாயிருந்துவாழ்ந்தேன்
வாசமாம்வாசவனுப்வாழ்க்கேதனின்றேன்
வாய்த்ததோருமூன்றெழுத்தைஅறிந்துகொண்டேன்
காசினியிலியாவருமேமெகிழ்ந்துபோற்றி
கருதினேஞ்ஞானமிருதாற்றுக்குள்ளே
பாசனுய்ப்பாசமலதயறுத்துப்போட்டேன்
பச்சைமயில்மீதேறிப்பறந்திட்டேனே ௮௨

பறந்திட்டேன்பராபரத்திற்பாய்ந்துயேறி
பல்லாயிரங்கோடியண்டம்பாய்ந்துசென்றேன்
அடைந்திட்டேன்அருபவெளிதானுமாகி
ஆயிரத்தெட்டுமலராகிநின்றேன்
நிறைந்திட்டேனிமலியுடபாதம்போற்றி
ஈசனென்றசூரனையும்நிறையாய்க்கொண்டேன்
வறைந்திட்டேன்வாய்வானகாற்றினாலே
வாசியென்றவடிவேலைவாங்கினேனே ௮௩

வாங்கினேன்வேலையுந்தான்கூர்மைசெய்து
வஞ்சனென்றவைவரையும்வதைத்துக்கொன்றேன்
ஏங்கியேசூரனையுமிறுத்திக்கொன்றே
னின்பதுன்பமிரண்டையுந்தாக்கிப்போட்டேன்
தாங்கியேதாய்பூசைசெய்துக்கொண்டேன்
தயங்கியேஉறமுறைபைத்தகர்ந்துபோட்டேன்
ஓங்கியேஒருநிலையாபொங்கிநின்றேன்
ஓம்நமசிவாயமென்றுஉறைத்திட்டேனே ௮௪

உறைத்திட்டஞானமெல்லாம்பார்க்கவேணும்
உத்தமனேஉலகத்திலிருந்தாலென்ன
துறைத்திட்டமானபொருள்தேடியென்ன
துசங்கட்டிபூவுலகையாண்டுமென்ன
நிறைத்திட்டமாடமுந்தான்கூடங்கட்டி
நீனிலத்திலிரிந்ததனால்வருவதேது
பறைந்திட்டபராபரத்தைபத்திநீங்கள்
பார்தனிலேவெகுநாளும்வாழுவென்றே ௮௫

வாழ்வென்று அகஸ்தியனேவகையுஞ்சொன்னேன்
வாய்த்ததொருஞானமெல்லாமதிக்கச்சொன்னேன்
தாழ்வென்றுகேட்டாக்கால்யென்னசெய்வோம்
தமர்தனையுங்கடத்தேறமாட்டாதப்பா
நாளைவந்துயெமன்பிடித்துபோனாலுந்தான்
நாதாந்தசொற்கமுந்தான்வாராதப்பா
தாழ்வென்றுநீங்களுந்தான்கெட்டுப்போனால்
தானென்னசெய்வதடாதாலுய்ப்பில்லை ௮௬

தானவனுய்த்தன்மனமாய்நிலைக்கவேணும்
சச்சிதானந்தவெளிதாண்டவேணும்
ஊனென்றவுலகத்தில்வாழவேணும்
உபயமதிற்சிகரங்காணவேணும்
நானானென்றுகவிபாடினாலும்
நாதாந்தசேபரொளிவுநட்கைபக்கானோர்
ஞானஆதிவஸ்தைபயிந்துமைந்தா
அசுரர்கலைதங்களையுமரித்திடவே ௮௭

அழுக்கவேவேணுமடாமனதழுக்கை
யறுத்தாக்காலவன்யோகியவனேசித்தன்
பெருக்கவேபிராணபங்கண்டேயும்
பிசகாமல்பிராணயங்கூட்டிச்செய்து
தருக்கவல்லே தாயமதத்தைப்போற்றிசெய்து
தமர்தனையுங்கடத்தேறுவேணுமென்று
யிருக்கவல்லேலாவேணுமென்றுசொன்னேன்மைந்தா
யிடறிந்துபோனக்காலென்னசெய்வேன் ௮௮

என்னமோமாயெப்படியோவென்றுநீயும்
யிருந்தாக்கால்வாரிவிடுஞ்சொன்னென்பாரு
வன்னமோவாய்ப்பானமும்மூலத்தை
மைந்தனேயனுதினமுமுண்டேதரு
நன்னமேசாதாந்தஅறிவிற்சேரும்
நாலைந்துவாசலையுமடைதக்கொள்ளு
முன்னமேசொன்னதொருமுறையைக்கொண்டு
முக்கண்டபிரமத்தில்முழங்குவாயே ௮௯

முழங்குகின்றசத்தமடாயிடிபோல்வீழும்
முற்பாடுமொன்றாகவேநிற்கொள்ளும்
அழுகலுகின்றஅறுவகையுமடித்தேதயோடும்
அப்ப முசத்தாற்றுகின்றதவிப்புமீசும்

மழங்குகின்றமனோன்மணியாள்வாசர்சென்று
மந்திரக்கதைக்கட்டறுத்துமதிக்கப்பெற்று
யிறங்குகின்றவடிவாகியிருந்துவாழ்ந்து
யிசனுக்குமேலாயிருந்துகொள்ளே ௯௰

கொள்ளவென்றுஉடந்தனுக்குபுத்திசொன்னேன்
குறையாதபரகெதியைப்பெறவேசொன்னேன்
அல்லவென்றுஅரிபிடம்பார்க்கச்சொன்னேன்
ஆயிரத்தெட்டுமேலறியச்சொன்னேன்
வல்லவென்றவாமமதைபுண்ணச்சொன்னேன்
வாய்வானசுழுனைமேலவாழச்சொன்னேன்
மெல்லவேமெய்ஞ்ஞானக்கடச்சொன்னேன்
மேன்மையுள்ளபரகெதியில்மேவிக்கொள்ளே ௯௧

கொள்ளவென்றுபென்றுநேகுமரநாதா
மொழியவொருஞானமெல்லாங்கூர்ந்துசொன்னீர்
அல்லவென்றுதெய்வம்வேறில்லையென்றீர்
அருபமாய்நின்றபொருளாருமென்றீர்
வல்லதொருவஸ்தாரமொழசொன்னீர்
வாழ்வானசுழுனைதனிலேயிருக்கச்சொன்னீர்
மெல்லதொருமெய்ஞ்ஞானஆன்மாவாகும்
பேதினியிலிருக்கின்றசொருபஞ்சொல்லே ௯௨

சொல்லுவேனினி மகனேநன்றாய்க்கேளு
கூடசமுள்ளஆன்மாவுஞ்சிருதிமாக்கம்
வெலலுவதென்றுஉ ஞ்சொல்லக்கூடா
வெட்டவெளியானதொருசொரூபந்தன்னை
அல்லுகிறஆனுமல்வப்பெண்ணுமல்ல
அப்பனேஅலியல்லசொனேன்கேளு
தள்ளுகிறபெரிதல்லசிறிதுமல்ல
தாளுகின்றவர்தன்மைதானே ௯௩

தானென்றஉள்விட்டிலிருந்தசோதி
தம்பிரான்றனையறியவகையைக்கேளு
ஊனனமுன்சொன்னஎழுமைமுன்டா
இத்தமனேசோதிதனைஉள்ளேகாண்பாய்
நானனாதமதையறிந்துகொண்டால்
நந்திகொலுவிருக்குமங்கேநாடிக்காண்பாய்
ஆனைஅருபவெளிதானுந்தானும்
ஆதிவஸ்தையறிவினலறியலாமே ௯௪

அறியவேயானுமினிகண்டுகொண்டேன்
அறிநிலையறுகவினென்றபேரு

பிரியலாம்பிருதிவியைப்பிடித்ததாலே
பேசாதவஸ்துவினுக்பிரபலமுமானேன்
துரியலாந்துரியமுந்தான் றூக்கும்போகுந்
துவாதசாந்தவீதியினின்றுலாவிக்கொண்டேன்
பரியலாம்பரிபீடநிலைநிக்கொண்டேன்
பகல்மணிக்கொலுவில்வீற்றிருந்திட்டேனே (௬௫)

வீற்றிருந்தேன்வெட்டவெளியாகவுந்தான்
வேசையர்கள்காமமென்றுவெறுத்துச்சொன்னார்
பார்த்திருந்தேன்பருவணியாய்த்திரண்டபின்பு
பாவையர்தன்மோகமுந்தான்பதிவாய்க்கொய்தேன்
யேற்றிருந்தமோகமெல்லாம்மேலேகொன்றேன்
யென்னசொல்வேனிம்மார்க்கமிதுதான்மைந்தா
காத்திருந்துச்சோதந்தைமேலாவாங்கிக்
கபாலமணிவாசலையுங்கடந்திட்டோமே (௬௬)

கடந்திட்டேனறுசுவையுங்கழித்துக்கொண்டேன்
காரணமாய்மூர்த்தியென்றுங்கருதினார்கள்
அடர்ந்திட்டேனம்பலத்திலாடல்செய்தேன்
ஆச்சரியமானதையுமறிந்துகொண்டேன்
படர்ந்திட்டேன்பாரபரத்தோடொடுங்கிநின்றேன்
பகலிரவுதனைகிப்பதியும்பெற்றேன்
நடந்திட்டேனடனமுந்தாராதங்கொண்டேன்
நானுகிநேராயிருந்திட்டேனே (௬௭)

இருந்திட்டேனென்னைத்தானுமீசனென்று
எல்லோரும்போற்றவுந்தாவருளும்பெற்றேன்
மறந்திட்டேன்மகோனமணியைநடுமையத்தில்
மாருட்டாவாசியெல்லாமறைத்துப்போட்டேன்
அறைந்திட்டேன்ஞானமெல்லாம்உலக்கேயீய்ந்தேன்
அபுருபமானதையுமறியச்சொன்னேன்
வரைந்திட்டேன்பக்குவந்தாளிதுதானென்று
வாதானஞானமதைகாட்டினேனே (௬௮)

நாட்டியடாபுத்திமதியுனக்கேசொன்னேன்
நலமில்லாகாரியத்தைதவிர்க்கச்சொன்னேன்
வாட்டியடாநெஞ்சனுக்கைவாங்கச்சொன்னேன்
வயிரமங்கேயிருக்குதென்றுவழியுஞ்சொன்னேன்
நாட்டியடாநாமத்தைக்கொள்ளச்சொன்னேன்
நந்திதனிலேயிருந்தாளச்சொன்னேன்

காட்டியடா கருவிகளைக் கொல்லச்சொன்னேன்
கூடசித்த சித்தனென் றுவந்திட்டாயே (௯௯)

வந்திடவே வச்சிரவடிவே யுங்கிட்டும்
வழக்கான வாசியுந்தான் வழியாய்க்காணும்
தந்திடவே தமர்திறக்கும் வாசல்தோணும்
தாயான சிற்பரையுஞ் சித்தியாவாள்
விந்திடவே விந்துவுந்தான் கட்டிப்போகும்
வீறான வீரியமுந் தணிந்துபோகும்
அந்திடவே யதிரூபவெளியுமாவாய்
ஆதிவஸ்து நீயாவா யறிந்துபாரே (௱)

பாரப்பா கேசரியாள் மவுனசித்தி
பாரிலுள்ள மும்மூலம் பகர்ந்துகொண்டால்
ஆரப்பா ஆதிவஸ்து நீதானச்சு
யரூபவெளி தன்னிலே யடங்கிநில்லு
கோரப்பா நினைவான ஆசைதன்னை
நித்திரையைப் போக்கியினி நினைவாய்நில்லு
காரப்பா கடம்பவனந் தருகேசெல்லு
காவலர்கள் தன்னையுந்தான் கருவாய்க்கொள்ளே. (௱௧)

கொள்ளடா மும்மூலங் கொள்ளாவிட்டால்
குருவறியக் காமமுந்தான் குதித்தே தப்பியோடும்
அல்லடா அம்மூலங் கொள்ளானால்
அனுவளவு காமமுந்தான் சாயாதையா
மெல்லடா பதின்மூன் றவருடங்கொள்ள
மேதினியிற் சஞ்சரித்து விரும்பிநில்லு
வல்லடா வல்லவனும் யோகம்பார்த்து
வாய்வான கமூல்தன்னில் வருந்திநில்லே (௱௨)

நில்லடா மும்மூலங் கொண்டபோது
நினைவற்று ஆசையற்றுப் பொறியுமற்றேன்
அல்லடா சாதிகுலஞ் சமையமற்றேன்
அருவுருவு மெனவேயாகின்றேன்
வல்லடா பரவிஷய மதுமற்றேன்
வையகத்தோ ரென்னையுந்தான் வணங்கப்பெற்றேன்
செல்லடா செல்வமயிலேறிக் கொண்டேன்
சிவமான குருபதத்தைப் போற்றினேனே (௱௩)

போற்றினேனென்று சொல்லிச் சொன்னீரையா
புகழான மும்மூலங் கொண்டோமென்றீர்
யேற்றினதோ கர்ப்பமுந்தான் தேகத்துள்ளே
யிருக்குதென்று மெம்பிரானெனக்குச் சொன்னீர்

வாழ்த்தினதோரிதைவிட்டாற்கற்பந்தானும்
வையகத்திலிருக்கின்றவகையுஞ்சொல்லுஞ்
சாத்திரமெந்தனுக்குத்தபவாய்ச்சொல்லுமே
சண்முகனே அந்தவழிசாற்றுவீரே (௧௪)

சாற்றுகிறேன்விபரமாய்மைந்தாகேளு
காரணியிற்கற்பமதைத்தெரியச்சொல்வேன்
ஏற்றுகிறதாரணியிற்கற்பந்தானும்
இருக்குதென்றுசொல்கதல்லாவில்லையில்லை
வாழ்த்துகின்றவையகத்தோர்தாமோடியோடி
வாழ்வதல்லால்வேறென்றுகற்பமில்லை
போற்றுகின்றமும்மலக்கற்பமுண்டால்
பொய்மாய்கைதானிறந்துபோகுந்தானே (௧௫)

போகுமடாசெடிபூடுகற்பமல்ல
புகழானசாக்குவகைதானுமல்ல
ஆகுமடா அவரவர்கள்அறிவிற்குள்ளே
அடங்கியிருக்குங்கற்பமதையுண்ணுமைந்தா
நாகமடாநாதமணியங்கேயிருக்கும்
நளினமென்றசாரையுந்தானுள்ளேயிருக்கும்
பாருமடாபருவமலைக்குள்ளிருந்துபாரும்
பச்சைமால்காவலென்றும்பகர்ந்திட்டோமே (௧௬)

பகர்ந்திட்டோர்கருநெல்லிமரந்தான்கேளு
பறந்துகொப்பென்றுபகர்ந்தேகிற்கும்
அகர்ந்திட்டவாசலதுஒன்பதாகம்
அரணுடையகாவலதுபோசொன்னேன்
இகர்ந்திட்டவிந்திரியமயமாகும்
ஈராறுதலமுமப்பியிருக்குமைந்தா
தகர்ந்திட்டாலொன்றுக்குமாகாதப்பா
தற்பரமாய்ச்சொல்லுகிறேன்சார்ந்துகேளே (௧௭)

கேளடா அதுபழுத்துவிழுகனித்தன்
கெடியாக அப்பழத்தைவிட்டிடாதே
ஆளடா அதையெடுத்துஉண்டாயாகில்
அப்பவல்லோமும்மலமுண்மைபார்க்க
மேளடாயிப்பழத்தைஉண்ணுவிட்டால்
மெய்ஞ்ஞானியாகவுந்தான்மாட்டாய்சொன்னேன்
ஆளடாயிதையெடுத்துக்கொண்டாயானால்
ஆன்மாவும்மோட்ச அறிந்துபாரே ௧௮

பாரென் றயிப்படியேசொன்னீரையா
    பழுதில்லாநாதமதைப்பகரச்சொன்னீர்
ஆறென்றசாதிவகையைந்தென்றார்கள்
    அவருடையநாதமதைப்பறிந்துகொள்வேன்
நேரறியநிலையாகச்சொல்லவேணும்
    நிலவரமாயெந்தனுக்குஉரைக்கவேணும்
காரறிந்தகரிமுனையைக்காட்டவேணும்
    கபடத்துஎந்தனுக்குகருதுவீரே ௱௯

கருதுகிறேன்கருமறைப்பைமைந்தாகேளு
    கன்னியர்கள்சாதியுடகபடைக்கேட்டீர்
அருதுகிறசாதியைந்துவகைகளென்றீர்
    அதுவெல்லாமுந்தனுக்குஅறியச்சொல்வேன்
